# கிறிஸ்துவின் சிந்தை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து


வாழ்க்கையிலுள்ள மாம்சப் பிரகாரமான
காரியங்களினின்று மாற்றப்படவும், அவருடைய
வார்த்தையின் மூலம் அவருடைய ஆவியினால்
மறுரூபமாக்கப்பட்டு தேவனுடைய பரிபூரண
சித்தத்தைச் செய்யும்படியாயும்.
கிறிஸ்துவுக்குள் இருந்த சிந்தை நமக்குள்
இருக்க விரும்புகிறோம்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-10-31M மறுரூபப்படுத்தும் வல்லமை

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மை யும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங் கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமா குங்கள்.

39. நாம் அனைவரும் செய்ய விரும்புவதும் இதுவே. அதாவது, 'இந்தப் பிரசஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய - பரிபூரணமும், பிரியமு மான சித்தம்செய்வதற்கு ' நம்மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்

டும்''. நாமிருக்கிறபடி, இப்பொழுது நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் பெற்றுள்ளபடி, பரிசுத்த ஆவியினால் நிறையப் பட்டுள்ளோம். வாழ்க்கையிலுள்ள மாம்சப் பிரகாரமான காரியங்களினின்று மாற்றப் படவும், அவருடைய வார்த்தையின் மூலம் அவருடைய ஆவியினால் மறுரூபமாக்கப் பட்டு தேவனுடைய பரிபூரண சித்தத்தைச் செய்யும்படியாயும். கிறிஸ்துவுக்குள் இருந்த சிந்தை நமக்குள் இருக்க விரும்புகிறோம்'

# "மனம் புதிதாகுதல்"



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-10-31M மறுரூபப்படுத்தும் வல்லமை

42. இப்பொழுது 'மறுரூபமாதல்'' (transforming), நான் ஒரு பொது வேலை நிறுவனத்தில் பணிபுரிந்தேன். அங்கு மின் அழுத்தத்தை மாற்றி அமைக்கும் இயந்திர மான டிரான்ஸ் ஃபார்மர் (Transformer) இருந்தது. அந்த சொல் தன்னில் தானே அந்த பொருளைக் கொண்டதாயுள்ளது. அந்த சொல்லுக்கு மாற்றப்பட்ட ஒன்று, அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றும் ஒன்று'' என்று பொருள்.

43. அடுத்த நாற்பத்தைந்து நிமிடம் அல்லது ஒரு மணி நேரத்திற்கு 'மறு

ரூபப்படுதல்' என்னும் பொருளின் மேல் பேச விரும்புகிறேன். வினோதமாய் தோன்றும் சிலவற்றை நான், இங்கு சொல்லக்கூடும். சகோ.லீயோ சற்று முன்பு கூறியது போல், அதை ஏற்றுக் கொண்டு, சிறிது நேரம் அதை ஆராய்ந்து பாருங் கள்.'' பாருங்கள், அதைக் குறித்து சிறிது சிந்தியுங்கள்.

44. 'மறுரூபமாகுதல்' என்பது ''மாற்றப் பட்டு, வித்தியாசமாக்கப்பட்டிருந்தல்'' என் பதாம்.

45. ஒரு தவளைக் குஞ்சைப்போல் (tadpole). அது தவளைக் குஞ்சிலிருந்து தவளையாக மாறுகின்றது. பாருங்கள், முன்பு அது ஒரு நெத்திலி மீனைப் போல் தண்ணீரில் நீந்தினது. அது தலையும்

வாலும் பெற்று காண்பதற்கு நெத்திலி மீனைப் போலவே இருந்தது. சிறிது கழிந்து அது தன் வாலை இழக்க ஆரம்பிக்கிறது. அது ஒரு வகையினின்று (Species) மற்றொரு வகைக்கு மாறுகிறது.

46. "உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்'' என்று பவுல் கூறிய போது, இதை தான் அவன் தன் மனதில் கொண்டிருக்க வேண்டுமென்று நினைக்கி றேன். நாம் பார்ப்போம். அதை நான் சரியாக சொல்லட்டும் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல்.'' ஒத்த வேஷம் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியும்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்.... உங்கள் மனம் புதி தாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

47. "மனம் புதிதாகுதல்.'' ஒரு காலத்தில் நீங்கள் விலையேறப்பெற்றதாக நினைத்தவைகளை விலக்கி, வேறொன் றுக்கு மாற்றப்படுவது; நீங்கள் முன்பு எப்படி இருந்தீர்கள் என்பதிலிருந்து இப் பொழுது எப்படி இருக்கிறீர்கள் என்பதற்கு.

தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.


அதாவது இயற்கைக்கு அப்பாற்பட்டது சம்பவிக்கும்போது, அது தேவனுடைய சிந்தையாகத்தான் இருத்தல் வேண்டும்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-03-24E ஏழாம் முத்திரை

35. இதனை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அதாவது இயற்கைக்கு அப்பாற்பட்டது சம்பவிக்கும்போது, அது தேவனுடைய சிந்தையாகத்தான் இருத்தல் வேண்டும்.

அவை நிகழும்போது உங்கள் சுய சிந்தையிலிருந்து நீங்கள் அப்பாற்சென்று விட்டு, உங்கள் சிந்தை..... இதனை நான் விவரிக்க வேண்டுமென்று நீங்கள் எதிர் பார்க்க வேண்டாம். ஏனெனில் அதை என்னால் விவரிக்க இயலாது. பாருங்கள்? நான் மாத்திரமல்ல, யாருமே அதை விவ ரிக்க முடியாது.

நீங்கள் அந்நிய பாஷை பேசினாலும், நீங்கள் குதித்தாலும், கூச்சலிட்டாலும், என்ன செய்தாலும், தேவன் உங்களில் வாசம் செய்கிறார் என்றும், நீங்கள் உங்கள் சொந்த சிந்தையில் நடக்கவில்லை என்றும், கிறிஸ்துவின் சிந்தையே அந்த வார்த்தையுடன் உங்களை நடத்துகிறதென்றும், அவ்விதம் தான் அது முற்றிலுமாக நடக்கிறதென்றும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

84. நீங்கள் எவ்வளவாக அந்நிய பாஷையில் பேசினாலும், எவ்வளவாக குதித்தாலும், எவ்வளவாக ஓடினாலும், எவ்வளவாக இதை, அதை; மற்றதை செய்தாலும் (பாருங்கள்?), நீங்கள் என்ன செய்தாலும், நீங்கள் செய்யும் தவறான காரியங்களினிமித்தம் உங்களை கண்டித் துணர்த்தும் பரிசுத்த ஆவி அங்கு இல்லா மல் போனால், அதனால் ஒரு பிரயோ ஜனமுமில்லை.

85. இப்பொழுது, ஆகையால்தான் இங்குள்ள இந்த நபர் சரியாயிருக்கிறார்.

பரிசுத்த ஆவி அதை செய்யட்டும். ஆனால் இப்பொழுது (பாருங்கள்?), இப்பொழுது., இது நேரிட காரணமா யிருப்பது... இதை நான் அன்போடும், அன்பினால் தெளிக்கப்பட்டும், வார்த்தை யில் அபிஷேகம் பண்ணப்பட்டும் கூறுகி றேன். பாருங்கள்? உண்மையான பரிசுத்த ஆவி உங்களுக்குள் இருக்குமானால், அதை சந்தேகிக்க மாட்டீர்கள். அதை நீங்கள் அறிந்திருப்பீர்கள், அது உங்க ளுக்கும் தேவனுக்குமிடையே உள்ள தனிப்பட்ட விவகாரம். பாருங்கள்? ஏதோ ஒன்று நடந்துள்ளது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு மாறுதல் ஏற்பட் டுள்ளது என்பதை நீங்கள் உணர்ந்திருப் பீர்கள். வேறெதாகிலும் இருந்தாலும் இல்லாமற் போனாலும், நீங்களே அந்த

மாறுதல். பாருங்கள்? நீங்கள்தான் அந்த மாறுதலை உங்களில் உண்டாக்கிக் கொண்டீர்கள், அதை நீங்கள் பெற்றிருக் கிறீர்கள் என்பதை அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் அந்நிய பாஷை பேசினாலும், நீங்கள் குதித்தாலும், கூச்சலிட்டாலும், என்ன செய்தாலும், தேவன் உங்களில் வாசம் செய்கிறார் என்றும், நீங்கள் உங்கள் சொந்த சிந்தையில் நடக்கவில்லை என்றும், கிறிஸ்துவின் சிந்தையே அந்த வார்த்தை யுடன் உங்களை நடத்துகிறதென்றும், அவ் விதம் தான் அது முற்றிலுமாக நடக்கிற தென்றும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

# கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த சிந்தையே ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் இருக்கிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து


# செய்தி: 63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்

26. அவருடைய சரீரம் அழிவைக் காண அவர் விட்டுக் கொடுக்கவில்லை. அவருடைய ஆத்துமாவை அவர் பாதாளத்தில் விடவுமில்லை, ஆனால் மூன்றாம் நாளில் அவரை உயிரோடெழுப்பினார். அவர் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறார். அவருடைய மகிமையின் சரீரத்தைப் போன்ற ஒரு சரீரத்தை நாம் பெற்றுக் கொள்வோம். ஆகவே தான் நாம் அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம். அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கடையவே இவ்வாறு

செய்கிறோம்... நாம் மறுபடியும் எழுந் திருந்து, நமக்கு புதிய ஜீவன் உண்டென் றும், நமது பழைய மனிதன் மரித்து விட்டானென்றும் உலகத்திற்கு சாட்சியாக அறிவிக்கிறோம். நமது முந்தின சுபா வத்தை நாம் அடக்கம் பண்ணிவிட்டோம்.

நம்முடைய முந்தின சுபாவம் ஒழிந்து விட்டது, இப்பொழுது நாம் அவருடைய சுபாவத்தைப் பெற்றிருக்கிறோம். அவர் நமக்குள் ஜீவிக்கிறார். நாம் நமது சித்தத்தை செய்வதில்லை. அவருடைய சித்தத்தை மாத்திரமே செய்கிறோம். நமது சொந்த சிந்தனைகளை நாம் சிந்திப்ப தில்லை. சிந்தைதான் சிந்தனை செய்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த சிந்தையே ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் இருக் கிறது. அங்கு ஆத்துமா உள்ளது. அதைக்

குறித்து தான் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.



# தேவனுடைய சிந்தையே நமது சிந்தையாக இருக்க நாம் அனுமதிக்கவேண்டும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-11-11E நான் ஏன் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கத்துக்கு விரோதமாயுள்ளேன்?

தேவனுடைய சிந்தையே நமது சிந்தையாக இருக்க நாம் அனுமதிக்கவேண்டும்.

'கிறிஸ்துவின் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.'' (பிலி. 2:5).

இந்த வேதாகமம் கிறிஸ்துவின் சிந்தையை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

'அபோகாலிப்ஸ்' என்று அழைக்கப்படும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதுமே இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துகின்றது.


எனவே நாங்கள் எங்கள் நினைவுகளை
சிந்திக்காமல், தேவனுடைய
சிந்தையையே சிந்திப்போமாக!
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 64-07-19E பாளயத்துக்கு புறம்பே செல்லுதல்

155. கர்த்தராகிய இயேசுவே, ஒருக்கால் இவ்வுலகத்தாரால் நாங்கள் வெறுக்கப்படலாம். ஆனால் நாங்கள் பிதாவினால் சிநேகிக்கப்படுகிறோம்.

அன்புள்ள தேவனே, எங்களுக்கு உதவி புரியும். இங்குள்ள ஒவ்வொருவருக்கும், ஆண்டவரே, நீர் உதவி செய்து, உம்முடைய ஆசீர்வாதங்கள் அவர்கள் மேல் தங்கியிருக்கட்டும்.

இப்பொழுதே அவர்கள் பாளயத்துக்கு புறம்பே செல்வார்களாக!

எங்களுடைய சுய சிந்தைக்கு அப்பால் நாங்கள் செல்வோமாக!

தேவனுடைய சிந்தையையே நாங்கள் அனுசரித்து செல்வோமாக!

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று வேதம் உரைக்கின்றது.

எனவே நாங்கள் எங்கள் நினைவுகளை சிந்திக்காமல், தேவனுடைய சிந்தையையே சிந்திப்போமாக!

ஏனெனில் நாங்கள் பெரும்பாலும் எங்கள் சிந்தனைகளில் தவறுள்ளவர்களா யிருக்கிறோம்.

எனவே நாங்கள் நிச்சயமுடையவர்க ளாயிருக்க உமது சிந்தை எங்களில் தங்கி யிருக்கட்டும்.

பிதாவின் சித்தத்தை செய்வதே அவருடைய சிந்தையாயிருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தையே பிதாவின் சித்தம்.




இப்பொழுது, என் சிந்தையில், உங்களுக்குள்ளாக பரிசுத்த ஆவியானவர், “நீ உன் வாக்கைக் காத்துக் கொள்” என்று கூறினார்.
ஆனால் மாம்சமே, “நீ மிகவும், களைத்துப் போயிருக்கிறாய்” என்று கூறுகிறது. பாருங்கள்?
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-23 கேள்விகளும் பதில்களும் COD #12

100. நீங்கள் ஏதாவது ஒன்றை நோக்கிப் பார்த்து, சரியாக அதை நோக்கிப் பார்த்துக் கொண்டு, “உம், என்னால் எதையுமே காணமுடியவில்லை, என்னால் கண்டு கொள்ள முடியவில்லை” என்று கூறுவீர்களானால், உங்களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று அர்த்தமாகும். புரிகின்றதா? புரிகின்றதா? உங்களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. காண்பது என்றால் “புரிந்து கொள்ளுதல்” என்று பொருள்படும். ஆனால் உங்கள் கண்களால் எதைவேண்டு மானாலும் நீங்கள் பார்க்கலாம். ஆனால்

உங்களுக்குள் என்ன இருக்கின்றதோ அதைக் கொண்டு தான் நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள், அதைக் கொண்டு நீங்கள் காண்கிறீர்கள். பாருங்கள்? தேவனுடைய கண்களைக் கொண்டு நீங்கள் காண்கி றீர்கள்.

101. ஆகவே இப்பொழுது, உங்கள் கருத்திலே நீங்கள் இருங்கள். நீங்கள் தயாரென்றால் உங்களுக்காக அருமை யான ஒரு கருத்து இங்கேயுள்ளது. ஒரு கிறிஸ்தவன் தன் கண்களால் காணாத காரியங்களை பார்த்துக்கொன்டிருக்கிறான் (பாருங்கள்?). ஏனெனில் நாம் காணப் படாததைத் தான் நாம் நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பாருங்கள்? எப்படி நீங்கள் அதைப் பார்க்கின்றீர்கள்? உங்க ளுடைய உள்ளார்ந்த கண்ணின் மூலமாகத்

தான். விசுவாசத்தினால் நீங்கள் அதைக் காண்கிறீர்கள். ஆகவே இப்பொழுது, நாம் அதை நிரூபிப்போம்: முழு கிறிஸ்தவ கவசமானது காணக்கூடாத பண்புகளால், காரியங்களால் உண்டாக்கப்பட்டிருக்கின் றது. கிறிஸ்தவகவசம் என்றால் என்ன? யாரோ ஒருவர் “பார்ப்பது தான் விசுவா சமாகும்” என்கிறார். அந்த நபர் ஒரு போதும் ஒரு கிறிஸ்தவராக இருக்க முடி யாது, ஏனெனில் கிறிஸ்தவ கவசமானது இதைக் கொண்டு தான் உருவாக்கப்பட் டிருக்கிறது, அதுதான்; அன்பு. நீங்கள் எப்பொழுதாவது அதைக் கண்டிருக்கி றீர்களா? அது செயல்படுத்தப் படுகையில் அதைக் கண்டிருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் அன்பை கண்டதில்லை. உங்கள் கண் களைக் கொண்டு ஒரு பொருளாகக் காணமுடியாது. அன்பின் ஒரு பகுதியை

உங்களிலிருந்து வெளியே எடுங்கள், அது எவ்வாறு காணப்படுகிறது என்பதை நான் பார்ப்பேனாக. பாருங்கள்? அன்பு, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, சாந்தம், விசுவாசம் - விசுவாசம், நற்குணம் (பாருங்கள்); சரீரப்பிரகாரமான கண்களாலே முழு கிறிஸ்தவ கவசமானது காணப்படாததாக உள்ளது, ஆனால் அது இருதயத்தாலே புரிந்துகொள்ளப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது! உங்களுக்குப் புரி கின்றதா. உங்களுக்கு புரிகின்றதா.

102. பவுல், "என் மனதினாலே... ("அவன் கிறிஸ்துவின் சிந்தையை உடை யவனாயிருக்கிறேன்!" என்று கூறினான்) "நானே என் மனதினாலே தேவனுக்கு ஊழியம் செய்கிறேன், மாம்சத்தினா லேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழி

யஞ் செய்கிறேன்" என்று கூறினான். அது என்ன? இன்றிரவு என் மாம்சமானது, "நீ மிகவும் களைப்படைந்திருக்கிறாய். உன் தொண்டை மிகவும் கரகரப்பாகக் காணப் படுகிறது. அங்கே குளிரில் வெளியே சென்று வந்தாய். இன்றிரவு உன்னால் நீ சபைக்குச் செல்ல முடியாது," என்று கூறு கிறது. அதுதான் மாம்சத்தின் பிரமாணம். "நீ அவர்களை தொலைபேசியில் அழைத்து விவரத்தைக் கூறி கேள்விகளை சகோதரன் நெவிலுக்கு அனுப்பி அவரை பதிலளிக்கும்படிக்கு கூறி விடு". ஆனால் பாருங்கள். நான் அதைச் செய்வதாகத்தான் வாக்களித்துள்ளேன். பாருங்கள்?

103. இப்பொழுது, என் சிந்தையில், உங்களுக்குள்ளாக பரிசுத்த ஆவியானவர்,

“நீ உன் வாக்கைக் காத்துக் கொள்” என்று கூறினார்.

ஆனால் மாம்சமே, “நீ மிகவும், களைத்துப் போயிருக்கிறாய்” என்று கூறுகிறது. பாருங்கள்?

104. இப்பொழுது மாம்சமானது, “இதோ பார், நீ மிகவும் அழகானவள், பள்ளியில் நீ தான் மிகவும் அழகுள்ள ஒருவள். ஆகவே உன்னுடைய பரிசுத்த உருளையான தாயும், உன் மூடபக்தி வைராக்கிய தந்தையும் கூறுவதின் மேல் கவனம் செலுத்தாதே. புரிகிறதா? பள்ளியில் நீ தான் அழகாகக் காணப்படுகின்ற பெண்மணியாவாய்” “நீ தான் அழகுள்ள வாலிபன், சிறப்பாகக் காணப்படுகிற பையன், உறுதியாக அமைக்கப்பட்ட கட்டுடல் கொண்டவன் நீ. நகரத்திலேயே நீ

தான் புகழ்பெற்றவன்," என்று கூறும். நீங்கள் பாருங்கள்? அந்த – அந்த... ஆகவே உங்களுடைய அவயவங்களை அதற்கு ஒப்புவித்து விடுகிறீர்கள், பிறகு எப்படி நீங்கள் வெளியே வருகிறீர்கள்? ஒவ்வொரு முறையும் அதன் கடைசியில்... பாருங்கள்?


105. பவுல் "என் மாம்சமானது எப்போதுமே அதற்கு ஒப்புவிக்கவே விரும்புகிறது," என்றான். உங்கள் மாம்சமும் அவ்விதம் தான் செய்கின்றது. பாருங்கள்? ஆனாலும் இருதயத்தில் இருக்கின்ற தேவனுடைய ஆவியின் பிரமாணமானது மாம்சத்தை மேற்கொண்டு, செய் என்று இருதயமானது எதைக் கூறுகிறதோ, அதற்கு சரீரத்தை கீழ்படியும்படி செய்கின்றது. அல்லேலூயா!

106. கவனியுங்கள், ஒரு பாவிக்கு அவ்விதமாக அது செய்யக் கூடுமென்றால், வியாதிக்கும் கூட அது கிரியை செய்யாமலிருக்குமோ? இருதயத்திலிருக்கின்ற தேவனுடைய ஆவியின் பிரமாணமானது “அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம்” என்பதை அறிந்திருக்கிறது, அவை தாமே தங்களுடைய வல்லமையால் நின்று அந்த சரீரத்திலிருக்கின்ற அந்த வியாதியானது தங்களுக்கு கீழ்ப்படியும் படிக்குச் செய்கின்றது, ஏனெனில் அது பிசாசாகும். உங்களுக்கு புரிகின்றதா. வியூ! இது மிகவும் ஆழமான ஒரு காரியமாகும். நான் உங்களுக்கு அதைத் தான் கூறுகிறேன். அதுதான். பாருங்கள்.

107. இப்பொழுது, பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணம் உங்கள்

மாம்சத்தில் கிரியை செய்கின்றது, ஆனால் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் உங்கள் இருதயத்தில் கிரியை செய்கின்றது. ஆகவே உங்களுடைய இருதயம், உங்கள் இருதயத்திலுள்ள உங்கள் ஆவியானது செய் என்று எதைக் கூறுகிறதோ அதற்கு சரீரமானது கீழ்ப்படியும்படிக்குச் செய்யும். அது முற்றிலும் சரியே. இப்பொழுது, அதைத் தான் பவுலும் கூறினான். மாம்ச மானது எப்பொழுதுமே, “நான் மிகவும் களைப்புற்றிருக்கிறேன்; என்னால் முடிய வில்லை; நான் போதுமானவன் அல்ல; என்னால் அதைச் செய்ய முடியாது” என்று கூறும்.





அவர்கள் "கர்த்தர் உரைக்கிறதாவது”
என்பதை உடையவர்களாயிருப்பார்கள்;
அல்லது அமைதலாயிருப்பார்கள்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

284. ஒரு ஒற்றுமையைக் கவனியுங் கள். பிதா முதலில் எதையாகிலும் காண் பியாமல் இயேசு தாமாக கிரியை செய் யாதது போல (தேவனுக்கும் கிறிஸ்து வுக்கும் உள்ள ஒரு மனம் - யோ: 5:19 ஐ பார்க்கவும்) மணவாட்டியும் இருப்பாள். அவளுக்கு அவர் தம்முடைய வார்த்தை யாகிய ஜீவனைக் காண்பிக்கிறார். (அவ ளுக்கு அவர் காண்பிக்கிறார்). அவள் அதைப் பெற்றுக்கொள்ளுகிறாள். அதைக் குறித்து அவள் ஒருபோதும் சந்தேகம் கொள்வதில்லை.

285. ஆகையால் யாதொன்றும் - மரணம் கூட - அவளை சேதப்படுத்துவதில்லை; ஏனெனில் விதையானது விதைக்கப்பட்டால் தண்ணீரானது பயிரை வளரச் செய்ய வேண்டும். ஆமென். (இப்பொழுது என்னிடம் ஒரு மகத்தான அல்லேலூயா உண்டு) இங்கே தான் இரகசியம் இருக்கிறது; வார்த்தையும் கிறிஸ்துவின் மணவாட்டியினுள் இருப்பதால், வார்த்தையைக் கொண்டு அவர் என்ன செய்ய சித்தமாயிருக்கிறாரோ, அதை அவள் அவருடைய நாமத்தினாலே செய்கிறாள். கர்த்தருடைய நாமத்தினாலே செய்கிறாள். "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்ற வார்த்தை அவளிடம் இருக்கிறது.

286. பின்பு அது உயிர்ப்பிக்கப்பட்டு, தனது நோக்கத்தை நிறைவேற்றும் வரை அது வளர்வதற்காக பரிசுத்த ஆவி அதற்கு

நீர்பாய்ச்சுகிறது. அவர்கள் அவருடைய சித்தத்தை மட்டும் செய்வார்கள். (ஆமென்! அதை நான் விசுவாசிக்கிறேன்) வித்தியாசமாக கிரியை செய்ய யாராலும் அவர்களை பலவந்தப்படுத்த முடியாது. அவர்கள் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்பதை உடையவர்களாயிருப்பார்கள்; அல்லது அமைதலாயிருப்பார்கள். அவர்கள் தேவனுடைய கிரியையைச் செய்வார்கள். ஏனெனில் அவர் இவ்வுலகத்திலிருந்த போது எல்லாக் கிரியைகளையும் முடிக்காததன் காரணத்தால், அவரே அவர்களுக்குள்ளிருந்து கிரியை செய்து முடிக்கிறார். அவர் இப்பொழுது அவர்கள் மூலமாய் நடப்பிக்கும் கிரியைகளை அவர் மாம்சத்திலிருந்த போது நிறைவேற்றுவதற்கு அது ஏற்ற சமயமாயிருக்கவில்லை.



உண்மையான மணவாட்டி தன்னை முழுவதுமாக அவருக்கு விற்றுப் போட்டதன் விளைவாக, அவளுடைய சொந்த சிந்தையை உபயோகிப்பதில்லை. அவருடைய சிந்தைதான் அவளுடைய சித்தம். அவளுடைய சித்தம் அவருடைய வார்த்தை

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-04-29E மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

62. ஒரு நிமிடம் கவனியுங்கள், கத்தோலிக்க சபையிலுள்ள கன்னியா ஸ்திரீயாகி தனது கடைசி திரையை (Last veil) பெற அவள் தன்னை முழுவதுமாக சபைக்கு விற்றுப்போட வேண்டியவளா யிருக்கிறாள். அவளுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்துமே சபைக்கு உரிமையாகிவிடுகிறது. அவளுக்கு சுய சிந்தை எதுவுமில்லை. அவள் கடைசி திரையைப் பெற்றுவிட்டால், அவளுக்கு சுய சிந்தை இருக்க முடியாது. அவளுக்கு சுய சிந்தை கிடையாது, சுயசித்தம் கிடை யாது. பாருங்கள், சாத்தான் ஒரு போலியை

இங்கு ஏற்படுத்தி விட்டான்... உண்மை யான கிறிஸ்துவின் சபை (மணவாட்டி) அவருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட் டுள்ள அவருடைய வார்த்தைக்கும் தன்னை முழுவதுமாக விற்றுப் போடுவத னால், கிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கிறது. என்ன ஒரு வித்தியாசம்!

இன்றைய நவீன சபையை நவீன உலகப்பிரகாரமான சபையை நாம் காண் கிறோம். நவீன உலகப் பிரகாரமான சபை ஆவிக்குரிய சபை இவ்விரண்டும். கர்ப்பந் தரித்து குமாரர்களைப் பிறப்பிக்க வேண் டும். அவைகளில் ஒன்று- ஸ்தாபன சபை - இந்நாட்களில் ஒன்றில் உலக சபைகளின் ஆலோசனை சங்கத்தில் பிரசவிக்கும். அது உலகத்திற்கு ஸ்தாபன சபைகளின் மூலம்

அந்திக் கிறிஸ்துவை அளிக்கும். அது முற்றிலும் உண்மை. அதைக் காண ஒருக் கால் நான் உயிரோடு இருக்கமாட்டேன். நான் உயிரோடு இருப்பேன் என்று நம்புகிறேன். ஆனால் வாலிபராகிய நீங்கள், ஒரு ஊழியக்காரர் இவ்வாறு கூறினதைக் கேட்டீர்கள் என்பதை ஞாபகத் தில் வைத்துக் கொள்ளுங்கள். அது கடைசி யாக மிருகத்தின் முத்திரையில் முடிவு பெறும். அவள் உலக சபைகளின் ஆலோ சனை சங்கத்தை உருவாக்கும் போது, அவளுடைய மகனை - அந்திக் கிறிஸ்துவை - பெற்றெடுப்பாள்.

63. மற்றது தேவனுடைய வார்த்தை யினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு சரீரத்தை - இயேசு கிறிஸ்துவின் பூரணப்பட்ட சரீர மாகிய மணவாட்டியை - பெற்றெடுக்கும்,

கிறிஸ்துவின் சரீரம் இன்னும் பூரணமாக வில்லை. அது எத்தனை பேருக்கு தெரியும்? மனிதனும் ஸ்திரீயும் ஒருவரா யிருக்கின்றனர். கிறிஸ்து ஒரே சரீரமாயிருக் கிறார். வார்த்தையாக. இவர்களிருவரும் ஒன்றாக இணைந்து, ஆதாம் தொடக்கத்தில் இருந்தது போல், ஒரே சரீரத்தை உரு வாக்குகின்றனர்.

மனிதனும் ஸ்திரீயும் ஒருவராயிருக்கின் றனர். **உண்மையான மணவாட்டி தன்னை முழுவதுமாக அவருக்கு விற்றுப் போட்டதன் விளைவாக, அவளுடைய சொந்த சிந்தையை உபயோகிப்பதில்லை. அவருடைய சிந்தை தான் அவளுடைய சித்தம். அவளுடைய சித்தம் அவருடைய வார்த்தை.**




ஜெபம் என்பது, "ஆண்டவரே, உமது வார்த்தையுடன் பொருந்துவதற்கென என்னை மாற்றி அமையும்'' என்பதாய் இருக்க வேண்டும்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-08-22M கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார்

33. அவர்கள், “வேதம் எப்படி...'' என்கின்றனர். ஜனங்கள் கூறுகின்றனர். அண்மையில் ஒரு மனிதனுடன் நான் காரில் சென்று கொண்டிருந்தேன். அவர் என்னிடம், ''சற்று யோசித்துப் பாருங்கள். பூமியில் வாழும் நாம், வேதாகமம் என்னும் யூதக் கட்டுக்கதைகளின் மூலம் இரட்சிக்கப்பட்டோம் என்று தான் சொல்ல முடியும்'' என்றார்.

34. நான், ''ஐயா, நீர் ஏன் அப்படிச் சொல்லுகிறீர் என்று எனக்குத் தெரிய

வில்லை. அது யூதக் கட்டுக்கதை என்று நான் நம்பமாட்டேன்” என்றேன்.

அவர், "சரி, நீங்கள் ஜெபம் செய்கி றீர்கள். யாரிடம் நீங்கள் ஜெபம் செய்கின் றீர்கள்? நான் இன்னின்ன காரியங்களுக் காக வேண்டிக் கொண்டேன். எனக்குக் கிடைக்கவில்லை'' என்றார்.

35. நான், ''நீங்கள் தவறான முறையில் ஜெபம் செய்திருப்பீர்கள். தேவனுடைய சித்தத்தை மாற்றுவதற்காக நாம் ஜெபம் செய்யக் கூடாது. நமது சிந்தை மாற வேண்டுமென்றே நாம் ஜெபிக்க வேண் டும். தேவனுடைய சிந்தைக்கு எவ்வித மாற்றமும் அவசியமில்லை” என்றேன். (பாருங்கள், பாருங்கள்?). நான், ''நீர் எதற்காக ஜெபம் செய்கிறீர் என்பதல்ல...' என்றேன்.

நான் ஒரு கத்தோலிக்க பையனை அறிவேன். அவன், தன் தாயார் உயிர்வாழ வேண்டுமென்று, தன்னிடமிருந்த ஜெபப் புஸ்தகத்திலிருந்து ஜெபங்களைப் படித்துக் கொண்டேயிருந்தான். ஆனால் அவனு டைய தாயார் இறந்து போனாள். அவன் ஜெபப் புஸ்தகத்தை தீயில் எறிந்து விட்டான். பாருங்கள்... "இப்பொழுது நான் ஜெபப் புஸ்தகத்தை படிப்பதில்லை. எனி னும்...'' பாருங்கள், நீங்கள் தவறான மனப் போக்கு உடையவர்களாயிருக்கிறீர்கள். என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் தேவனுக்குப் போதிக்க முயலுகிறீர்கள்.

ஜெபம் என்பது, "ஆண்டவரே, உமது வார்த்தையுடன் பொருந்துவதற்கென என்னை மாற்றி அமையும்'' என்பதாய் இருக்க வேண்டும். "உமது சிந்தையை நான் மாற்றட்டும்'' என்றல்ல; ''எனது

சிந்தையை மாற்றி அமையும் என்று (பாருங்கள்?) "உமது சித்தத்திற்கேற்ப என் சிந்தையை மாற்றும். உமது சித்தம் இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆண் டவரே, உமது சிந்தையைப் போல் என் சிந்தையை நீர் மாற்றி அமைக்காமல், நான் இவ்விடம் விட்டுச் செல்ல அனுமதியா தேயும். என் சிந்தை உமது சிந்தையைப் போல் இருக்குமானால், நீர் எழுதின ஒவ்வொரு வார்த்தையையும் நான் விசுவாசிப்பேன். உம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று நீர் அதில் கூறியிருக்கிறீர். ஆண்டவரே, நான் உம்மில் அன்பு கூருகிறேன். எனவே சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது''




கிறிஸ்துவின் சிந்தை உங்களிலிருக்குமானால் நீங்களும் வார்த்தையாயிருக்கிறீர்கள். தேவனுடைய ஜீவிக்கிற வார்த்தையாய் இவ்வுலகத்தில் அவருக்கு பிரதிநிதிகளாக அவருடைய கிரியைகளை தொடர்ந்து செய்வீர்கள். (அது சரி.) சபையானது அவ்விதமாகவே இருக்க வேண்டும்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62-03-18M உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #1

191. சரி. வார்த்தையின் விசுவாசிகளும் ஆவியும் நிச்சயமாக ஒன்றாக இருத்தல் அவசியம், உங்களுக்குப் புரிகிறதா? விசுவாசிகளும், வார்த்தையும், ஆவியும் முற்றிலுமாக ஒன்றாகயிருக்க வேண்டும். உங்களுடைய சொந்த எண்ணத்தை நீங்கள் எண்ணுவதில்லை. உங்கள் சொந்த சிந்தனையை நீங்கள் உபயோகிப்பதில்லை. அது அற்புதமானதில்லையா? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கும். பாருங்கள்? கிறிஸ்துவிலிருந்த சிந்தை உங்களிலிருக்குமானால் அவர் வார்த்தையை எடுத்த வண்ணமே

நீங்களும் எடுப்பீர்கள். ஏனெனில் அவரே வார்த்தையாயிருக்கிறார். **கிறிஸ்துவின் சிந்தை உங்களிலிருக்குமானால் நீங்களும் வார்த்தையாயிருக்கிறீர்கள். தேவனுடைய ஜீவிக்கிற வார்த்தையாய் இவ்வுலகத்தில் அவருக்கு பிரதிநிதிகளாக அவருடைய கிரியைகளை தொடர்ந்து செய்வீர்கள். (அது சரி.) சபையானது அவ்விதமாகவே இருக்க வேண்டும்.**

192. அது அவ்விதமாயிருக்குமே யானால், வேதமானது ஆதியிலே இயேசு வின் சீஷர்களின் மூலம் வெளிப்பட்ட விதமாக மறுபடியும் உங்களில் வெளிப் பட்டு ஜீவிக்கிறதாயிருக்கும்.

# கிறிஸ்துவின் சிந்தையை உங்களில் வரவிடுவீர்களானால் அது உங்களை வார்த்தையினால் கர்ப்பந்தரிக்கச் செய்யும்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

164. ஓ! ஜனங்களே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, எனக்கு செவிகொடுங்கள்.

தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறெதையும் நான் விசுவாசிக்கிறதில்லை, அதுவே என் ஜீவனாயும் என்னுடையவைகளெல்லாம் அவராகவே கொண்டிருக்கிறேன். நீங்களும் அதையே செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

**உங்களுடைய நடைகளும், பேச்சுகளும், அசைவுகளும், நீங்கள் எதைச் செய்தாலும்**

**அவைகள் தேவனுடைய வார்த்தையிலிருக்கட்டும்.**

**கிறிஸ்துவின் சிந்தையை உங்களில் வர விடுவீர்களானால் அது உங்களை வார்த்தையினால் கர்ப்பந்தரிக்கச் செய்யும்.**

**ஸ்தாபனத்தின் சிந்தனையை உங்களில் வரவிடுவீர்களானால், நீங்கள் ஸ்தாபனத்தையே கர்ப்பந்தரிப்பீர்கள்.**

கிறிஸ்துவின் சிந்தனையை உங்களில் வரவிடுவீர்களானால், அவர் ஒருபோதும் தம்முடைய வார்த்தையை மறுதலிக்க மாட்டார். ஏனெனில் அவர் தேவனாயிருக்கிறார்.

அப்பொழுது நீங்கள் வார்த்தையை உற்பவித்து அதை விசுவாசிப்பீர்கள்.

உங்களை ஸ்தாபனத்தார் வெளியே தள்ளி உதைத்துத் தள்ளி, ஓடச் செய்து, எல்லாக் கதவுகளையும் அடைத்தாலும் நான் அதற்காக கவலைப்படமாட்டேன், நீங்கள் அவ்விதமாகவே வார்த்தையோடு நடந்து செல்வீர்கள்! ஆமென்! ஹூயூ! நான் துரிதமாக முடிக்க வேண்டும்.

165. இப்பொழுது கிறிஸ்து தமக்கு ஒரு மணவாட்டியை எடுத்து, தமது வார்த்தையாகிய வித்து அவளுடைய கருப்பையில் கர்ப்பந்தரிக்க செய்து கொண்டிருக்கிறார். (ஆவிக்குரிய கருப்பையில்) அவளுடைய சிந்தனையில் ஸ்தாபனத்தின் பதர் கலக்காது. ஏனெனில் அவள் அவருக்கு ஒரு கன்னிகையாயிருக்கிறாள்.









# கிறிஸ்துவின் சிந்தை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து